**பாளி மற்றும் பௌத்த கற்கைப் பட்டப்பின் படிப்பு நிறுவனம் - 2025**

-------------------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பாளி மற்றும் பௌத்த பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் ("நிறுவனம்") 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகளை கொண்டமைந்த 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 1979 இன் 08 ஆம் இலக்க பாளி மற்றும் பௌத்த கற்கை பட்டப்பின் படிப்பு நிறுவன விதப்புரையின் 23 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) உப பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவனத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்கும் போது அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகள் ஏற்படும் ஆபத்துகளை இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டது. தவறாக காண்பிப்பதால் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுகளினால் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி காரணமாக ஏற்படும் தாக்கம் அதிகமாயின் அவற்றை கூட்டுத் சதியின ஊடாக, போலியான ஆவணங்களை தயாரிப்பதன் மூலம், வேண்டுமென்றே விட்டு விடுதல் போன்ற காரணங்களால் ஆகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்றவரையில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தின் 39(4) ஆம் பிரிவு | கூட்டுத்தொகை ரூபா 132,397,880 ஆக இருந்த 11 நிதியங்கள், இச்சட்டம் நடைமுறைக்கு வந்த திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள், அதாவது 2025 ஆகஸ்ட் 07 ஆம் திகதிக்கு முன்னர், கலைக்கப்படுவதற்கோ அல்லது நியதிச்சட்ட ரீதியான நிதியங்களாக மாற்றப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவன ரீதியான நியதிச்சட்ட நிதியங்கள் தொடர்பான அனைத்து அறிக்கைகளும் 2025 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | குறித்த நிதியங்களைக் கலைத்து, தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களை பல்கலைக்கழக நிதியத்தின் மூலம் மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் | குறித்த பணிகள் நிறைவுசெய்யப்பட்டு 02 வருடங்கள் கடந்திருந்ததுடன், | வைப்புகளை விடுவித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு | 02 வருடங்களைக் கடந்த வைப்புகள் அரசாங்க வருமானத்திற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 570 | கூட்டுத்தொகை ரூபா 1,084,789 ஆக இருந்த 07 தக்கவைப்புத் தொகை வைப்புகளை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறு விடுவித்துக்கொள்ளப்படாத தக்கவைப்புத் தொகைகள் காணப்படுமாயின், அவற்றை நிறுவன வருமானத்திற்கு வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | வரவு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பந்தி மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 870 | அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருக்குக் கிடைக்கும் பரிசுகள், வெகுமதிகள் என்பன அவர் அரசாங்கப் பிரதிநிதி என்ற வகையில் வகிக்கும் பதவி காரணமாகக் கிடைத்த பரிசுகள், வெகுமதிகளாகக் கருதப்பட வேண்டும் என்பதுடன், வெளிநாட்டு அரச தலைவரொருவரிடமிருந்தோ அல்லது பிரதிநிதியொருவரிடமிருந்தோ பரிசுகள், வெகுமதிகள் போன்றவை கிடைக்கப்பெறுமாயின், அது தொடர்பில் வெளிவிவகார அமைச்சின் செயலாளருக்கு அறிவித்து, நிறுவனத்திற்குக் கிடைத்த நன்கொடையொன்றாகக் கருதி கணக்கில் வைக்கப்பட வேண்டும். எனினும், நிறுவனத்தின் பணிப்பாளர் தேரர் அவர்களுக்கு 2023 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற ரூபா 6,628,501 நன்கொடை, நிரந்தரப் பணியாளர்களுக்கான சுகாதாரக் காப்புறுதி நிதியம் என்ற பெயரில் பேணப்பட்ட | இந் நிதி நன்கொடை மற்றும் நிதியத்தை நிறுவுதல் தொடர்பில் முகாமைத்துவ சபைக்கு அறிவித்து, அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | தாபன விதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணக் கோவைக்கு அமைவாக மேற்குறித்த நன்கொடைகள் கணக்கில் வைக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணக்கொன்றில் வரவு வைக்கப்பட்டிருந்தது. வைப்புகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் மூலம் கிடைக்கப்பெற்ற ரூபா 2,405,600 வட்டி வருமானம் முறையான அங்கீகாரமின்றி நிறுவனத்தின் நிரந்தரப் பணியாளர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 2024 நவம்பர் 25 ஆம் திகதிய வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட பொருட்கள், வேலைகள் மற்றும் ஆலோசனை சாராத சேவைகளுக்கான பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.1.1 மற்றும் 4.1.3 (ஆ) ஆம் பந்திகள் | ஒவ்வொரு பெறுகை நிறுவனமும், நடுத்தர கால வரவு செலவுத் திட்டக் கட்டமைப்பிற்கு அமைவாக 03 வருட காலப்பகுதிக்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் அடிப்படையில் பிரதான பெறுகைத் திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டும் என்பதுடன், விரிவான வருடாந்த பெறுகைத் திட்டத்தில் குறித்த ஒவ்வொரு பெறுகைப் பொதிக்கும் விலைக்கேள்விகளைக் கோரும் திகதியிலிருந்து ஒப்பந்தத்தை வழங்குதல் மற்றும் நிறைவு செய்தல் வரையிலான பெறுகை நடவடிக்கைகள், உப நடவடிக்கைகள் மற்றும் தொடர்புடைய முன் மற்றும்/அல்லது பிந்திய மீளாய்வு நடவடிக்கைகளுக்கான காலவரையறைகள் உள்ளடக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிறுவனத்தினால் அவ்வாறு செயற்படப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிறுவன நிதியேற்பாடுகளின் அடிப்படையில், பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.1.1 ஆம் பந்திக்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு அமைவாக காலவரையறைகளுடன் கூடிய விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதியிட்ட திறைசேரியின் செயலாளரின் 2021/01 ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| | (i) 3.2 ஆம் பந்தி | நிதியாண்டு முடிவடைந்து 05 மாதங்கள் நிறைவடைவதற்கு முன்னரும், வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னரும் வருடாந்த செயலாற்றுகை மீளாய்வுக் கூட்டம் (APRM) நடத்தப்பட வேண்டும் என்ற போதிலும், நிறுவனத்தினால் அவ்வாறு செயற்படப்பட்டிருக்கவில்லை. | 2026 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்காய்வு அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர், வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் வருடாந்த செயலாற்றுகை மீளாய்வுக் கூட்டத்தை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைக்கு அமைவாக செயலாற்றுகை மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். |
| | (ii) இணைப்பு இலக்கம் 01 இன் 01 ஆம் பந்தி | நிர்ணயிக்கப்பட்ட நோக்கங்களுக்கு அமைவாக நிறுவனத்தின் தற்போதைய நிலைமைக்கும் எதிர்பார்க்கப்படும் நிலைமைக்கும் இடையிலான வேறுபாடுகளை அடையாளம் காண்பதற்காக பரப்பு பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், அடையாளம் காணப்பட்ட பரப்புகள் பொருத்தமான மூலோபாயங்களுடன் நிவர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மூலோபாயத் திட்டத்தைத் தயாரிக்கும்போது நிறுவனத்தினால் அவ்வாறு செயற்படப்பட்டிருக்கவில் | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைக்கு அமைவாக செயற்படுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைக்கு அமைவாக பரப்பு பகுப்பாய்வொன்றை மேற்கொண்டு, அதற்கிணங்க நடவடிக்கைகள் அடையாளம் காணப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | லை. | | |
| (ஊ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவை | | | |
| (i) | ix ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 3.2 ஆம் பந்திகள் | 2025 செப்டெம்பர் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதியில், நிறுவனத்தின் 20 உத்தியோகத்தர்களினால் 63 சந்தர்ப்பங்களில் கைவிரல் அடையாள இயந்திரத்தை அல்லது பதிவேடொன்றைப் பயன்படுத்தி வருகை மற்றும் வெளியேறல் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், நிறுவனத்தின் கல்விசார் பணியாளர்களின் வருகை மற்றும் வெளியேறல் பதிவேடொன்றின் / இயந்திரமொன்றின் மூலம் அல்லது முறையாக உறுதிப்படுத்தப்படாமல், மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா 74,243,916 செலுத்தப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் வருகை மற்றும் வெளியேறலைப் பதிவு செய்வதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்படுவதாகவும், அலுவலகத்திற்கு வெளியே செல்லும்போது இறுதி இலக்கிடத்தில் கடமை நிறைவடையும் சந்தர்ப்பங்கள் மற்றும் மின்சாரத் தடைகள் காரணமாக குறித்த இயந்திரம் செயலிழத்தல் போன்ற காரணங்களினால் இந்நிலைமை அவதானிக்கப்படுவதாகவும், வருகை மற்றும் வெளியேறலை முறையாக உறுதிப்படுத்தி பேணுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளைப் பின்பற்றுமாறு கல்விசார் பணியாளர்களின் உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | பல்கலைக்கழக தாபன விதிக்கோவைக்கு அமைவாக வருகை, வெளியேறல் மற்றும் விடுமுறைப் பதிவுகளைப் பேணுவதற்கான முறையான செயன்முறையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | x ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பந்தி | 2025 ஆம் ஆண்டில் 31 சந்தர்ப்பங்களில் 20 உத்தியோகத்தர்கள் முறையான அனுமதியின்றி கடமை நேரத்தின்போது நிறுவனத்திலிருந்து வெளியே சென்றிருந்தனர். | திருத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | கடமை நேரத்தின்போது தனிப்பட்ட தேவைகளுக்காக நிறுவனத்திலிருந்து வெளியேறுமாயின், தனிப்பட்ட விடுமுறையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கான செயன்முறையொ |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ன்று நிறுவப்பட வேண்டும். |
| (எ) | 2014 பெப்ரவரி 11 ஆம் திகதிய 2/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 4 (ii) ஆம் பந்தி | இடைக்கால ஆராய்ச்சி அறிக்கைகளைச் சமர்ப்பித்து, ஆராய்ச்சி கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாத 12 உத்தியோகத்தர்களுக்கு 2025 ஆம் ஆண்டில் ரூபா 5,400,597 ஆராய்ச்சி கொடுப்பனவுகளாகச் செலுத்தப்பட்டிருந்தது. | 2026 ஆம் ஆண்டில் 06 மாதங்களுக்குள் ஆராய்ச்சி முன்னேற்றத்தைப் பெற்றுக்கொண்டு, கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | ஆராய்ச்சி கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு முன்னர் ஆராய்ச்சி அறிக்கைகளுக்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | 2015 நவம்பர் 17 ஆம் திகதிய 15/2015 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கைக் கடிதம் | நிறுவனத்தினால் 2024 ஆம் கல்வியாண்டில் நடத்தப்பட்ட 08 பட்டப்படிப்புப் பாடநெறிகளுக்குரிய 58 பாடங்களின் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு 137 நாட்கள் முதல் 218 நாட்கள் வரையான காலம் எடுத்திருந்தது. | 2026 ஆம் ஆண்டிற்காக காலவரையறையொன்று தயாரிக்கப்பட்டு, அதற்கிணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கைக்கு அமைவாக 03 மாதங்களுக்குள் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2023 ஜுலை 18 ஆம் திகதிய SEC/2023/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4 ஆம் பந்திக்கு அமைவாக, ஊழியர்களுக்கு வழங்கப்படும் போக்குவரத்து, பயண அல்லது அதனுடன் தொடர்புடைய வசதிகளுக்கான நன்மையின் முழுமையான பெறுமதி முற்பண தனிநபர் வருமான வரியைக் கணக்கிடும்போது கருத்திற்கொள்ளப்பட வேண்டும் என்ற போதிலும், அதற்கு முரணாக, குறித்த கொடுப்பனவுகளில் 25 சதவீதம் மட்டுமே முற்பண தனிநபர் வருமான வரியைக் கணக்கிடும்போது கருத்திற்கொள்ளப்பட்டதன் காரணமாக, ஓர் உத்தியோகத்தருக்குரிய முற்பண தனிநபர் வருமான வரி ரூபா 33,347 இனால் குறைவாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | 2026 ஏப்ரல் மாதத்திலிருந்து 100 சதவீதமாக வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கு அமைவாக முற்பண வரி கணக்கிடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 18,222,835 மிகையாக இருந்ததுடன், அதற்கு இணையாக கடந்த ஆண்டின் மிகை ரூபா 49,809,582 ஆக இருந்தது. அதற்கிணங்க, நிதிப் பெறுபேற்றில் ரூபா 31,586,747 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு பரிமாற்றமல்லாத மூலதன வருமானப் பெறுகைகள் குறைவடைந்தமையும், செயற்பாட்டுச் செலவுகள் அதிகரித்தமையும் பிரதான காரணங்களாக அமைந்திருந்தன.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

(அ) 2025 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான மொத்த வருமானம் ரூபா 308,128,434 ஆக இருந்ததுடன், அதற்கு இணையாக கடந்த ஆண்டின் வருமானம் ரூபா 279,474,144 ஆக இருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த வருமானம் 10.25 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் மொத்த செலவு ரூபா 289,905,599 ஆக இருந்ததுடன், 2024 ஆம் ஆண்டில் மொத்த செலவு ரூபா 229,664,562 ஆக இருந்தது. அதற்கிணங்க, 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் மொத்த செலவு ரூபா 60,241,037 இனால், அதாவது 26.23 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1. முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| விற்பனை செய்யக்கூடிய புத்தகங்களின் எண்ணிக்கை தொடர்பில் முறையான மதிப்பீடொன்றோ அல்லது திட்டமிடலொன்றோ மேற்கொள்ளப்படாமல், நிறுவனத்தினால் 2024 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னரும் அச்சிடப்பட்ட 22 புத்தகங்களுக்குரிய கிரயம் ரூபா 314,027 ஆக இருந்த 790 பிரதிகளும், 2025 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட 07 புத்தகங்களுக்குரிய கிரயம் ரூபா 682,383 ஆக இருந்த 820 பிரதிகளும் விற்பனை செய்ய முடியாமல் செயலற்ற நிலையில் காணப்பட்டன. | அண்மைக்காலத்தில் சுமார் 150 பிரதிகள் மாத்திரமே அச்சிடப்படுவதுடன், இந்நூல்களை அச்சிடுவதன் பிரதான நோக்கம் விற்பனை மூலம் நிதி இலாபத்தை ஈட்டுவது மாத்திரமல்ல என்பதுடன், புலமைசார் கல்வி வெளியீடொன்றின் நிறுவன ரீதியான பெறுமதி மற்றும் பங்களிப்புக்கு முன்னுரிமை வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. | விற்பனை தொடர்பில் முறையான முன்னறிவிப்பொன்றை மேற்கொண்டு புத்தகங்கள் அச்சிடப்பட வேண்டும். |

### 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| சுயநிதிப் பாடநெறிகளான பௌத்த ஆயுர்வேத ஆலோசனை தொடர்பான பட்டப்பின் டிப்ளோமா பாடநெறி (சிங்களம்) மற்றும் பௌத்த ஆயுர்வேத ஆலோசனை தொடர்பான முதுமாணிப் பாடநெறி (சிங்களம்) ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட வருமானத்தில் இருந்து, தியானம் மற்றும் ஆலோசனை நிலையத்தைப் பராமரிப்பதற்காக கடந்த மூன்று வருட காலப்பகுதியில் ரூபா | 2026 ஆம் ஆண்டிற்காக தியானப் பிரிவில் நடைமுறை தியான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஒருங்கிணைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கிணங்க, குறித்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான திட்டமொன்றும் வரவு செலவுத் திட்ட அறிக்கையொன்றும் | ஒதுக்கீடுகள் தொடர்புடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 1,118,982 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆலோசனைப் பிரிவுக்காக மீளாய்வாண்டில் ரூபா 840 மட்டுமே செலவிடப்பட்டிருந்ததன் காரணமாக, மேற்குறித்த ஒதுக்கீடுகள் தொடர்புடைய நோக்கங்களுக்காக வினைத்திறனுடன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்கப்பட்டு, தொடர்புடைய அதிகாரிகளின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. முறையான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றவுடன் குறித்த நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | |

**3.3 வாகனக் கட்டமைப்பு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2016 திசெம்பர் 29 ஆம் திகதியிட்ட 30/2016 ஆம் இலக்க அரசாங்க வாகனங்களைப் பராமரிப்பது தொடர்பான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்திக்கு அமைவாக, மாதாந்த எரிபொருள் பயன்பாடு தொடர்பான தகவல்கள் உரிய படிவத்திற்கு அமைவாகப் பேணப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு செயற்படப்பட்டிருக்கவில்லை. | உரிய படிவத்திற்கு அமைவாக நாளதுவரையாக்கிப் பேணுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களைப் பேணுவதற்கான படிவத்திற்கு அமைவாக தகவல்கள் பேணப்பட வேண்டும். |

**4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**4.1 நோக்கங்கள் மற்றும் கூட்டிணைந்த திட்டம்**

உயர்கல்விக்கான வாய்ப்புகளையும் அணுகலையும் அதிகரித்தல், தேரவாத பௌத்த தத்துவத்தை கற்பிப்பதற்கான பிரதான உயர்கல்வி நிறுவனமாக மாறுதல், மேம்படுத்தப்பட்ட நெறிமுறை மற்றும் ஆன்மீக விழுமியங்களுடன் தொழில்வாய்ப்பினை மேம்படுத்துதல் மற்றும் வினைத்திறனை ஊக்குவித்தல் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, நிறுவனத்தினால் உள்நாட்டுப் பாடநெறிகள் பதினாறும் சுயநிதிப் பாடநெறிகள் ஆறும் நடத்தப்பட்டு வந்தன.

2025 ஆம் ஆண்டில், கலைமாணி (உள்நாட்டு) பட்டதாரிகள் 451 பேரும், கலைமாணி (வெளிநாட்டு) பட்டதாரிகள் 41 பேரும், பட்டப்பின் டிப்ளோமாதாரிகள் 84 பேரும், தத்துவமாணி பட்டதாரிகள் 16 பேரும் உள்ளடங்கலாக, மொத்தம் 592 பட்டதாரிகளை நிறுவனம் உருவாக்கியிருந்தது.